(பத்தாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

**இல. 147.]**

# பாராளுமன்றத்தின் ஒழுங்குப் பத்திரம்

## 2026 மே 07, வியாழக்கிழமை, மு.ப. 9.30 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

765/2025

கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன,— பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்குப் பின்னர், அந்த சம்பவம் தொடர்பாக ஆரம்பிக்கப்பட்ட விசாரணை நடவடிக்கைகளின் ஆரம்ப கட்டங்களில் ஈடுபட்டிருந்த அலுவலர்களின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி அலுவலர்களில், பின்னர் குறித்த விசாரணை நடவடிக்கைகளிலிருந்து நீக்கப்பட்ட அலுவலர்களின் எண்ணிக்கை யாது;

(iii) அவ்வாறு அலுவலர்களை விசாரணை நடவடிக்கைகளிலிருந்து நீக்கியமைக்கான காரணங்கள் யாவை;

(iv) மேற்படி (ii) இல் குறிப்பிடப்பட்டுள்ள அலுவலர்களை விசாரணை நடவடிக்கைகளுடன் மீண்டும் இணைத்துக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா;

(ஆ) இன்றேல், ஏன்?

2.

815/2025

கௌரவ ஹெக்டர் அப்புஹாமி,— வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு முதல் இற்றைவரை இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் பதிவு செய்து வீட்டுப் பணிப்பெண்களாக வெளிநாடு சென்றுள்ளவர்களின் எண்ணிக்கை ஆண்டுவாரியாக வெவ்வேறாக யாது;

(ii) மேற்படி எண்ணிக்கை, ஒவ்வொரு நாடு வாரியாக வெவ்வேறாக யாது;

(iii) அவர்களின் தகவல்கள் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் தரவுத் தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளனவா;

(iv) அவர்களில் உயிரிழந்த, தற்கொலை செய்துகொண்ட மற்றும் வேறு விபத்துக்கள் காரணமாக பாதிக்கப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது;

(v) அவர்களின் நலன்புரிக்காக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3.

840/2025

கௌரவ முஜிபுர் ரஹுமான்,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மொரட்டுவை, தர்மரதன வித்தியாலயம், லக்ஷபதிய சிக்ஷாதான வித்தியாலயம் மற்றும் சுனந்தோபனந்த ஆரம்பப் பாடசாலை ஆகிய பாடசாலைகளில் தற்போது கல்வி பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) மேற்படி பாடசாலைகள் தற்போது மூடப்படும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளமையை அறிவாரா என்பதையும்;

(iii) ஆமெனில், அது தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4.

1016/2025

கௌரவ றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி,— பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடந்த 03 ஆண்டுகளில், பெண்களுக்கு எதிராக நடந்துகொண்டிருக்கும் இணையக் குற்ற வழக்குகளில், தீர்க்கப்பட்ட மற்றும் விசாரணைக்காக அல்லது வழக்குத் தொடருதலுக்காக நிலுவையில் உள்ள இணையக் குற்ற வழக்குகளின் எண்ணிக்கையினை ஒவ்வொரு மாகாணத்திற்குமென வெவ்வேறாகவும்;

(ii) அத்தகைய வழக்குகளைத் தீர்ப்பதற்கு எடுக்கும் சராசரி காலம் யாதென்பதையும்;

(iii) வட மாகாணம் உட்பட ஒவ்வொரு மாகாணத்திலும் அவ்வகையான வழக்குகளை விசாரிக்க பிரத்தியேக இணையக் குற்றத் தடுப்புப் பிரிவுகள் நிறுவப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iv) செயற்கை நுண்ணறிவு (AI) அடிப்படையிலான கண்காணிப்பு அமைப்புக்கள், பொது மக்கள் விழிப்புணர்வுத் திட்டங்கள் மற்றும் இறுக்கமான அமுலாக்க நடவடிக்கைகள் மூலம் பெண்களுக்கான டிஜிட்டல் பாதுகாப்பை வலுப்படுத்த ஏதேனும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(v) அவ்வாறெனில், அத்தகைய முன்னெடுப்புக்களின் விபரங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5.

1188/2025

கௌரவ சிவஞானம் சிறீதரன்,— பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மற்றும் மன்னார் ஆகிய மாவட்டங்களில் சிவில் பாதுகாப்பு திணைக்களத்தினால் விவசாயப் பண்ணைகள் நடத்தப்படுகின்றதென்பதை அவர் அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி விவசாயப் பண்ணைகள் அமைந்துள்ள இடங்கள், மாவட்டங்கள் மற்றும் பிரதேச செயலகங்கள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) இந்த விவசாயப் பண்ணைகளின் பரப்பளவு மற்றும் அவற்றில் பணிபுரிகின்ற ஊழியர்களின் எண்ணிக்கை தொடர்பான விபரங்கள் மாவட்ட வாரியாக வெவ்வேறாக யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் வசிக்கும் மக்களின் அன்றாட இயல்பு வாழ்க்கையில் பாதுகாப்பு படையினரின் தலையீடு காணப்படுகின்றதை அவர் அறிவாரா என்பதையும்;

(ii) இராணுவத்தினால் நடத்தப்படுகின்ற இவ்வாறான விவசாயப் பண்ணைகளில், வடக்கு மாகாண சபையிடம் ஒப்படைக்கப்பட வேண்டிய விவசாயப் பண்ணைகள் இதுவரை ஒப்படைக்கப்படாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iii) குறித்த விவசாயப் பண்ணைகளை ஒப்படைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ள காலப்பகுதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

6.

1337/2025

கௌரவ எம்.எஸ். உதுமாலெப்பை,— இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அம்பாறை மாவட்டத்தின், 20 பிரதேச செயலகப் பிரிவுகளிலும் பணியாற்றும் விளையாட்டு அலுவலர்களின் பெயர்கள் பிரதேச செயலகப் பிரிவு வாரியாக வெவ்வேறாக யாவை என்பதையும்;

(ii) நீண்டகாலமாக மேற்படி மாவட்டத்தில் விளையாட்டு அலுவலர் பதவியில் 13 வெற்றிடங்கள் காணப்படுவதை அறிவாரா என்பதையும்;

(iii) மேற்படி வெற்றிடங்களை நிரப்புவதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) அம்பாறை மாவட்டத்தின், தெஹியத்தகண்டிய தொடக்கம் பானம வரை சிங்கள மக்கள் அதிகளவில் வசிக்கும் பிரதேசங்களுக்கு மாவட்ட இளைஞர் சேவை அலுவலரொருவரும் (சிங்களம்) மற்றும் தமிழ் மக்கள் அதிகளவில் வசிக்கும் பிரதேசங்களுக்கு மாவட்ட இளைஞர் சேவை அலுவலரொருவரும் (தமிழ்) நியமிக்கப்பட்டிருந்த போதிலும் இன்றளவில் தமிழ் மாவட்ட இளைஞர் சேவை அலுவலரொருவர் கடமையில் இல்லை என்பதை அறிவாரா;

(ii) ஆமெனில், மேற்படி பிரதேசங்களுக்கு மாவட்ட இளைஞர் சேவை அலுவலரொருவர் (தமிழ்) நியமிக்கப்படுவாரா;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

7.

1457/2025

கௌரவ துரைராசா ரவிகரன்,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) முல்லைத்தீவு, மன்னார் மற்றும் வவுனியா ஆகிய மாவட்டங்களிலுள்ள தபால் அலுவலகங்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட, இன்றளவில் சேவையாற்றுகின்ற மற்றும் வெற்றிடங்களாக காணப்படும் ஆளணியின் எண்ணிக்கை வெவ்வேறாக யாவை என்பதையும்;

(ii) மேற்படி ஆளணி வெற்றிடங்களை நிரப்புவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) இன்றளவில் பிரதேச தபால் அத்தியட்சகர் அலுவலகங்கள் நிறுவப்படாத மாவட்டங்கள் யாவை என்பதையும்;

(iv) வவுனியாவில் இயங்குகின்ற முல்லைத்தீவு மாவட்டத்துக்குரிய தபால் அத்தியட்சகர் அலுவலகத்தை மீளவும் முல்லைத்தீவில் நிறுவுவதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இன்றளவில் தபால் விநியோக நடவடிக்கைகளுக்கு வாகன வசதிகள் காணப்படாத மாவட்டங்கள் யாவை என்பதையும்;

(ii) வினைத்திறனுடன் கூடிய தபால் சேவையினை வழங்குவதற்கு மேற்படி மாவட்டங்களுக்கு வாகன/போக்குவரத்து வசதிகளை வழங்குவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

8.

1471/2025

கௌரவ சானக மாதுகொட,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தெஹிவளை, தேசிய மிருகக்காட்சிச்சாலையின் கழிவுகள் முறையாக அகற்றப்படுவதில்லை என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) மிருகக்காட்சிச்சாலையைப் பார்வையிட வருபவர்கள் உணவருந்துவதற்காக தற்போதுள்ள இடங்கள் அதற்குப் பொருத்தமானவை என்று ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iii) இன்றேல், அதற்குப் பொருத்தமான இடமொன்றை நிர்மாணிக்க எதிர்பார்க்கப்படுகின்றதா என்பதையும்;

(iv) மிருகக்காட்சிச்சாலையின் மாத வருமானம் மற்றும் செலவு வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(v) எதிர்காலத்தில் மிருகக்காட்சிச்சாலையில் மேற்கொள்ளப்படவுள்ள நவீனமயப்படுத்தற் பணிகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

9.

1823/2026

கௌரவ (டாக்டர்) பத்மநாதன் சத்தியலிங்கம்,— வீடமைப்பு, நிர்மாணிப்பு மற்றும் நீர்வழங்கல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வவுனியா மாவட்டத்தில் சமுதாய நீர்வழங்கல் கருத்திட்டங்கள் அமுல்படுத்தப்படுகின்றனவா;

(ii) ஆமெனில், தற்போது அமுல்படுத்தப்பட்டு வருகின்ற கருத்திட்டங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) மேற்படி கருத்திட்டங்கள் பற்றிய தகவல்கள் யாவையென்பதையும்;

(iv) மேற்படி கருத்திட்டங்களில் மக்களுக்கான நீர்வழங்கல் கருத்திட்டங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(v) மேற்படி நீர்வழங்கல் கருத்திட்டங்களினால் பயனடையும் பிரதேசங்கள் யாவையென்பதையும்;

(vi) தற்போது அமுலாக்கப்படாத நிலையிலுள்ள நீர்வழங்கல் கருத்திட்டங்கள் உள்ளனவா என்பதையும்;

(vii) ஆமெனில், அக்கருத்திட்டங்கள் யாவையென்பதையும்;

(viii) மேற்படி கருத்திட்டங்கள் அமுலாக்கப்படாமைக்கான காரணங்கள் யாவையென்தையும்;

(ix) அவ்வாறு அமுலாக்கப்படாத கருத்திட்டங்களை செயற்பாட்டிற்குக் கொண்டுவர நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்தையும்;

(x) ஆமெனில், அந்த திகதி யாதென்தையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

10.

1854/2026

கௌரவ ரொஷான் அக்மீமன,— வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) திருகோணமலை மாவட்டத்தின் திருகோணமலை நகரம் மற்றும் கடவத் பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள தான்யகம பிரதேசத்தில் உணவு ஆணையாளர் திணைக்களத்திற்குச் சொந்தமான வீட்டுத் தொகுதியொன்று உள்ளது என்பதையும்;

(ii) மேற்படி வீட்டுத் தொகுதி முறையாக நிருவகிக்கப்படுவதில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வீட்டுத் தொகுதியில் தற்போதுள்ள வீட்டு அலகுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அவ்வீடுகளை வழங்கும் வழிமுறை மற்றும் அளவுகோல்கள் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

1.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அலுவல்கள்,— ஒழுங்குப் பத்திரத்தில் காணப்படும் பொது அலுவல்களில் 03 ஆம், 04 ஆம் மற்றும் 05 ஆம் இலக்கப் பிரேரணைகள் மீதான நடவடிக்கைகள் இன்றைய அமர்வில் பாராளுமன்ற நிலையியற் கட்டளை 27 இன் ஏற்பாடுகளிலிருந்து விலக்குப் பெறுமாக.

2.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு (இல. 1),— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 8 இன் ஏற்பாடுகளினால் தடைபெறாமல், இன்றைய தினம் சபை அமர்வு நேரம் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 12.30 மணி வரையும் மற்றும் பி.ப. 1.00 மணி முதல் பி.ப. 5.30 மணி வரையும் இருக்குமாக. பி.ப. 5.30 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை ஒத்திவைப்பாராக.

3.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு (இல. 2),— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 8 இன் ஏற்பாடுகளினால் தடைபெறாமல், 2026 மே 08 ஆம் திகதி, வெள்ளிக்கிழமை சபை அமர்வு நேரம் மு.ப. 11.35 மணி முதல் பி.ப. 5.30 மணி வரை இருக்குமாக. பி.ப. 5.30 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை ஒத்திவைப்பாராக.

4.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு (இல. 3),— இப்பாராளுமன்றம் இன்று அதன் அமர்வு கலையும் போது 2026 மே 08 ஆம் திகதி, வெள்ளிக்கிழமை மு.ப. 11.35 மணி வரை ஒத்திவைக்கப்படுமாக.

5.

கௌரவ எம். ஏ. எம். தாஹிர்,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி,— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக :-

"மாஸ் மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்"

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*1.

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர்,— தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் பிரிவுகள் 18, 24, 28 மற்றும் 30 உடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய, அச் சட்டத்தின் 44 ஆம் பிரிவின் (ஏ) மற்றும் (ஒ) பந்திகளின் கீழ் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2026 சனவரி 17 ஆம் திகதிய 2471/68 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2026.04.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*2.

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர்,— மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் 21, 22, 23, 24 மற்றும் 24அ என்னும் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 237 ஆம் பிரிவின் கீழ் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2026 சனவரி 05 ஆம் திகதிய 2470/14 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2026.04.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*3.

பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சர்,— குடிவருவோர் மற்றும் குடியகல்வோர் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— (351 ஆம் அத்தியாயமான) குடிவருவோர் மற்றும் குடியகல்வோர் சட்டத்தின் 23 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 52 ஆம் பிரிவின் கீழ் பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சரினால் 2026 ஏப்ரல் 23 ஆம் திகதி ஆக்கப்பட்டதும், 2026.05.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*4.

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் தீர்மானம்,— 1959 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்கச் சட்டத்தினாலும், தேசிய அரசுப் பேரவையின் 1978 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்கச் சட்டத்தினாலும், 1988 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் திருத்தப்பட்டவாறான (40 ஆம் அத்தியாயமான) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதியவர்களால், மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் II ஆம் பிரிவின் ஏற்பாடுகள், 2026 ஏப்ரல் 28 ஆம் திகதியிலிருந்து இலங்கை முழுவதும் நடைமுறைப்படுத்திக்கொண்டு செய்யப்பட்ட பிரகடனம் அங்கீகரிக்கப்படுமாக.

*5.

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— அத்தியாவசிய பொதுச் சேவைகள் சட்டத்தின் கீழ் தீர்மானம்,— 1979 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க, அத்தியாவசிய பொதுச் சேவைகள் சட்டத்தின் 2 ஆம் பிரிவிற்கமைய சனாதிபதி அவர்களுக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், 2026 ஏப்ரல் 28 ஆம் திகதிய 2486/13 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் மற்றும் அதன் அட்டவணையில் பிரசுரிக்கப்பட்டதும் 2026.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான பிரகடனம் அங்கீகரிக்கப்படுமாக.

*6.

நிதிசார் கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*7.

பயங்கரவாதி நிதியளிப்பை ஒடுக்குதல் மீதான சமவாய (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*8.

உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*9.

மத்தியஸ்தம் (குடியியல் மற்றும் வர்த்தகப் பிணக்குகள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*10.

இருப்பாட்சியாளர்களைப் பாதுகாத்தல் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*11.

வாடகை (நீக்கல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*12.

தண்டனைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2025 செப்தெம்பர் 24) [1].

*13.

பட்டலந்த வீடமைப்புத் திட்டத்தில் உள்ள சித்திரவதைக்கூடங்கள், சட்டரீதியற்ற தடுப்பு நிலையங்களை நிறுவுதல், பராமரித்தல் ஆகியவற்றை விசாரணை செய்த ஆணைக்குழுவின் அறிக்கை,— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2025 ஏப்ரல் 10 ),— “2025 மார்ச் 14 ஆம் திகதியன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பட்டலந்த வீடமைப்புத் திட்டத்தில் உள்ள சித்திரவதைக்கூடங்கள், சட்டரீதியற்ற தடுப்பு நிலையங்களை நிறுவுதல், பராமரித்தல் ஆகியவற்றை விசாரணை செய்த ஆணைக்குழுவின் அறிக்கை பாராளுமன்றத்தினால் பரிசீலனை செய்யப்படுமாக.” எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

14.

மாகாண சபைத் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

15.

நிகழ்நிலைக் காப்புச்சட்டம் (இரத்துச் செய்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

16.

இலங்கை வசதிகள் முகாமைத்துவ நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* **அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.**

---

[1] “சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக” எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.